# உலகில் மனித உரிமைகள் மீறப்படும் நாடுகளில் இலங்கையே முதலாவது இடத்தை வகிக்கின்றது

கண்டுக்குளி கிளை நூலகம்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 22 இதழ் 240
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 08 — 10 — 1992

(லண்டன்)
உலகில் மனித உரிமை மீறப்படும் நாடுகளில் இலங்கை தான் முதலாவது இடத்தை வகித்து வருகின்றது என்று மனித உரிமை மீறல்களை கண்காணிக்கும் ஐ. நா. குழு

(4-ம் பக்கம் பார்க்க)

## ஐ. நா. மனித உரிமைக்குழு இலங்கை வருகை

(கொழும்பு)
ஐ நா. மனித உரிமைகளின் 3 உறுப்பினர்களும், ஜெனிவாவிலுள்ள ஐ. நா. அலுவலகத்தைச் சேர்ந்த 2 அலுவலர்களுமாக 5 பேர் இலங்கை வந்துள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆட்பலம் இருந்தால் யாழ். குடாவைப் பிடிக்கலாம்

— ஜெரி டி சில்வா

(அனுராதபுரம்)
''ஆயுதங்களும், ஆள் பலமும் இருந்தால் யாழ். குடாநாட்டைச் சீக்கிரம் கைப்பற்றலாம்'' என வடபகுதி இராணுவத் தளபதி ஜெரி. டி. சில்வா அனுராதபுரத்தில் தெரிவித்துள்ளார்.
மேஜர் ஜெனரல் சில்வா

(4ம் பக்கம் பார்க்க)

### ★ மட்டக்களப்பு வெலிக்கந்தையில்

# இரு இராணுவ காவலரண்கள் புலிகள் தாக்குதலில் தகர்ந்தன

## அதிகாரி உட்பட இரு பொலிஸார் பலி

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு வெலிக்கந்தையில் உள்ள இராணுவ முகாமின் இரு காவலரண்களை நேற்று முன்தினமிரவு விடுதலைப்புலிகள் தாக்கி அழித்தனர். இத்தாக்குதலில் ஒரு பொலிஸ் அதிகாரி உட்பட இரு பொலிஸார் கொல்லப்பட்டதுடன் நவீன இராணுவ சாதனங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டம், வெலிக்கந்தை பிள்ளையார் கோவிலடிக் கிராமத்தில் அமைக்கப்பட்டிருந்த இரு இராணுவக் காவலரண்கள் மீது புலிகள் நேற்றுமுன்தினம் அதிகாலை 3-55 மணியளவில் திடீர் அதிரடித் தாக்குதலை மேற்கொண்டதில் இரு பொலிசார் கொல்லப்பட்டதுடன், பலர் காயமடைந்த நிலையில், ஒரு கிலோ மீற்றருக்கப்பால் இருந்த பிரதான இராணுவ முகாமுக்குத் தப்பி ஓடினார்கள்.

(4ம் பக்கம் பார்க்க)

## வைத்திய நிபுணர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது

— சுகாதார அமைச்சர்

(கொழும்பு)
இலங்கையில் நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவது உண்மை. இங்கு 350 வைத்திய கலாநிதிகள் மட்டுமே தற்போது கடமையில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் 1000 பேருக்கு மேல் தேவை உண்டு.

(4-ம் பக்கம் பார்க்க

## கிழக்குப் பகுதியில் பணியாற்ற பாக். வைத்தியர்கள் வருகை

(கொழும்பு)
பாகிஸ்தானிய வைத்திய நிபுணர்களின் சேவை இலங்கைக்கு கிடைக்க விருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அம்பாறை, திருமலை, அனுராதபுரம், பொலநறுவை போன்ற பகுதிகளில் இவர்கள் சேவை புரிவர்.
ஜனாதிபதி பிரேமதாசாவின் வேண்டுகோளின் பேரிலேயே இவ்வைத்தியசேவை இலங்கைக்கு கிடைக்கவுள்ளதாகவும் இதன்படி முதலாவது வைத்திய நிபுணர் குழு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இலங்கை வரவிருப்பதாகவும்

(4-ம் பக்கம் பார்க்க)

## ராணுவ கண்ணியை புலிகள் அகற்றினர்

(மட்டுநகர்)
மட்டக்களப்பு 6ம் கட்டையில், பொதுமக்களும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் நடமாடும் வீதியில் இராணுவத்தினர் புதைத்து வைத்திருந்த அதிசக்தி வாய்ந்த கண்ணி வெடி ஒன்றை விடுதலைப் புலிகள் மிகச் சாதுரியமாக அப்புறப்படுத்தியுள்ளனர்.
நேற்றுமுன்தினம், விடுதலைப் புலிகள் மேற்படி கண்ணி வெடியை அகற்றிய செய்தியை அறிந்த இராணுவத்தினர், அப்பகுதியை சுற்றி வளைத்து தேடுதல் வேட்டையை நடாத்தியதாகக் கூறப்படுகின்றது. (வி)

## எழுதுவினைஞர் பரீட்சைக்கு சென்றோர் பொலிஸாரினால் கைது

(மானிப்பாய்)
எழுதுவினைஞர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அண்மையில் கொழும்பு சென்ற வடபகுதியைச் சேர்ந்த பலர் பொலிசாரினால் விசாரணை செய்யப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இதுபற்றித் தெரியவருவதாவது:- அரச திணைக்களங்

(4ம் பக்கம் பார்க்க)

### வல்வெட்டித்துறையில்

## காவல்துறை பணிமனை நேற்று திறந்துவைப்பு

(யாழ்ப்பாணம்)
தமிழீழ காவல்துறையின் வல்வெட்டித்துறைப் பிரதேசத்திற்கான காவல் பணிமனை நேற்றுக்காலை கடற்புலிகளின் தளபதி கங்கை அமரனால் திறந்து வைக்கப்பட்டது.
இந்நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் தமிழீழ தேசியக் கொடியைத் தளபதி கங்கை அமரனும், காவல்துறைக் கொடியைக் காவல்துறைப் பொறுப்

(4ம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றில் ஆஜராக கொர்பச்சேவ் மறுப்பு

(மொஸ்கோ)
முன்னாள் சோவியத் அதிபர் மிகையில் கொர்பச்சேவ் நீதிமன்றத்தில் ஆஜராக மீண்டும் மறுத்துவிட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது
சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மீது விதிக்கப்பட்ட தடையானது சட்டபூர்வமாக செல்லுபடியானதுதானா என்பதனைப் பரிசீலிக்கும் ரஷ்ய நீதிமன்றமே முன்னாள் அதிபர் கொர்பச்சேவை நீதிமன்றில் ஆஜராகும்படி [illegible]ணித்துள்ளதாம். (க

## வரவு-செலவுத் திட்டத்துக்கு 6600 கோடி ரூபாவை திரட்ட அரசு முயற்சி

(கொழும்பு)
1993 ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 6600 கோடி ரூபா துண்டு விழும் தொகையென மதிப்பிடப்பட்டுள்ளது.
வருமானம் 16 730 கோடி ரூபாவாகவும், செலவினம் 10,130 கோடி ரூபாவாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி 6600 கோடி ரூபா எதிர் வரும் ஆண்டு துண்டு விழவுள்ளது.
இத்தொகையை உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் திரட்டி, ஈடு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. [கே]

## வடபகுதி மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையால் தமிழ் மக்கள் இன்னலுறுகின்றனர்

\- ஆயர் அம்பலவாணர் பேட்டி

(யாழ்ப்பாணம்)
ஸ்ரீலங்கா அரசினால் 1990-ம் ஆண்டு ஜூன் மாதம் முதல் வடபகுதி மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத்தடை மற்றும் பெற்றோல், டீசல், மின்சாரத்தடை போன்றவற்றால் வடபகுதிவாழ் தமிழ் மக்கள் பெரிதும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.''
மேற்கண்டவாறு தென்னிந்திய திருச்சபையின் யாழ். அத்தியட்சாதின ஆயர் அம்பலவாணர் பி. பி. ஸியின் கொழும்பு நிருபர் ஸியாகா நோசுவுக்கு யாழ்ப்பாணத்

(4ம் பக்கம் பார்க்க)

காடு நகர் மயமானால்
நாடு நோய் மயமாகும்

# மாதகல் பகுதியைச் சேர்ந்த 300 குடும்பங்கள் கிளிநொச்சியில் குடியமர்வு

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளினால் அண்மையில் மாதகல் பகுதியிலிருந்து வெளியேறிய குடும்பங்களில் 300-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் கடந்த வாரம் கிளிநொச்சியில் குடியேற்றப்பட்டன.

கிளிநொச்சியிலுள்ள அரச சார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்கள் இவர்களுக்கு வேண்டிய சகல வசதிகளையும் செய்து கொடுத்துள்ளன.

இதேபோன்று சாவகச்சேரிப் பகுதியிலும் 15? குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. (வி)

# போக்குவரத்து ஊழியர் சம்பளம் வழங்கப்பட்டது

(பண்டத்தரிப்பு)

வடபிராந்திய போக்குவரத்துச்சபையைச் சேர்ந்த ஊழியர்களுக்கு கடந்த ஜூன், ஜூலை ஆகஸ்ட் மாதங்களுக்கான சம்பளப்பணம் அண்மையில் கோண்டாவில் சாலையில் வைத்து வழங்கப்பட்டுள்ளது.

சபையை சேர்ந்த உயரதிகாரிகள் அண்மையில் கொழும்பு சென்று இந்த சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு வந்து வழங்கியுள்ளனர். (72)

# சேதமடைந்த மின் கம்பங்கள்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, கலைநகர் முதலான பகுதிகளில் இலங்கை மின்சார சபையினரால் நாட்டப்பட்ட மர மின்சாரக் கம்பங்கள் பல கறையான் அரித்தும் உழுத்தும் பழுதடைந்து சரிந்துவிழும் நிலையிலுள்ளன.

இதனால பல வீடுகள் சேதமடையலாமென அஞ்சப்படுகிறது. சில வீட்டுக்காரர்கள் நிலைமையைச் சுட்டிக்காட்டி சித்தன்கேணியில் இயங்கும் மின்சார சபையினருக்கு நேரில் அறிவித்துள்ளனர் (139)

# தாண்டிக்குளத்திற்கு அப்பால் அரசின் நிர்வாகம் இல்லை

## — சுதந்திரக் கட்சி எம். பி.

(கொழும்பு)

''வடக்கே தாண்டிக்குளத்துக்கு அப்பால் ஸ்ரீலங்கா அரசின் நிர்வாகம் கிடையாது. எனவே அங்கு வீடுகளைக்கட்டுவது என்ற பேச்சுக்கே இடமில்லை''.

மேற்கண்டவாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் உறுப்பினர் எஸ். டி. குணசேகரா நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வீடமைப்பு பற்றிய குறை நிரப்பு பற்றிய பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: அநுராதபுரத்திலிருந்து வவுனியாவரையுள்ளமக்களின் பிரச்னைகள் தீர்க்கப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மணலாறு, வவுனியா, முல்லைத்தீவ எல்லைப் பகுதிகளில் வாழ்ந்து வரும் மக்கள் பெரும் இன்னல்களை அனுவித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (க)

# அகதிகளுக்கு உடுதுணிகள்

(உடுவில்)

சண்டிலிப்பாய் சீரணி நாகம்மாள் கோவிலில் மாரீசன்கூடல், மாதகல போன்ற இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து வந்து தங்கியுள்ள சுமார் எண்பது குடும்பங்களுக்கு சமையல் பாத்திரங்கள, உடுதுணிகள், படுக்கைப் பாய்கள் போன்றவற்றை யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவையினர் அண்மையில் வழங்கினர். (109)

0 0 0

(உடுவில்)

இராணுவ நடவடிக்கையில் இடம்பெயர்ந்து சுன்னாகம் பகுதியில் உள்ள பாடசாலைகள், கோவில்களில் தங்கியுள்ள மக்களுக்கு தேவையான உடுதுணிகளை சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினர் வழங்கி வருகின்றனர்.

லயன்ஸ் கழகத்தினர் சுன்னாகம் ஐயனார் கோவில், மயிலணி மகாவித்தியாலயம், சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம் ஆகிய இடங்களுக்குச் சென்று உடுதுணிகளை வழங்கினர் (109)

# அடையாள உண்ணா நோன்பு

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபன் நினைவாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தில் கடந்த மாதம் 25ம் திகதி அடையாள உண்ணா நோன்பு அனுஷ்டிக்கப்பட்டது.

இதில் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள், ஊழியர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனா. இங்கு நினைவுரைகளும் கவிதாஞ்சலியும இடம்பெற்றன. (சி

# இராசி பலன்

**08-10-1992**

**வியாழக்கிழமை**

**(தமிழுக்கு புரட்டாதி 22)**

துவாதசி மாலை 7-00 வரை சதயம் பி. இ. 4-12 வரை மரணயோகம், இராகுகாலம் பகல் 1-32 முதல் 3-04 வரை சுபநேரம் காலை 7-32 முதல் 9-02 வரை.

மேடம்: தனலாபம், விருந்துண்ணல், உற்சாகம்.

இடபம்: சுபகாரிய முயற்சி, நண்பர் உதவி, தொழில் சிறப்பு.

மிதுனம்: உடல் உபாதை, மனவெறுப்பு, குடும்ப தொல்லை'

கடகம்: உபவாசம், வீண் கலவரம், தன விரயம்.

சிங்கம்: சுபசெய்தி, குடும்ப மகிழ்ச்சி, பெண் உதவி.

கன்னி: வாக்கை காப்பாற்றுதல், மனைசிறப்பு மகிழ்ச்சி.

துலாம், பிறர் தொல்லை, சோம்பல், அலைச்சல்.

விருச்சிகம்: பயண துன்பம், மனவேதனை, சகோதரபகை.

தனுசு: கடினவேலை, குடும்ப உல்லாசம், புதிய சிந்தனை.

மகரம்: அதிகாரிகள்சினம், வேண்டாத பகை, வெறுப்பு

கும்பம்; சுபகாரியம், அதிக பேச்சு, இனசன மகிழ்ச்சி,

மீனம்: கண்ணில் ரோகம், குடும்பசிக்கல், வாக்குப்பகை.

— ஜோஸ்யர்

# வரி விளம்பரம்


## தேவை

றபர் ஸ்ராம், ஓவிய வேலை தெரிந்தவர்களும், பழகுவதில் ஆர்வமுள்ள O/L சித்தியடைந்த இருபாலாரும் நேரில் வரவும் செல்வம் ஆட்ஸ், கே. கே. எஸ் வீதி, சுன்னாகம். [சி-6867]

## சித்திராலயா இடமாற்றம்

இதுவரை காலமும் சோவில் வீதி, நல்லூரில் இயங்கி வந்த எமது நிறுவனம் 5-10-92 திங்கள் முதல் ஸ்ரான்லி வீதியிலுள்ள பழைய இடத்தில் இயங்குகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம் (சி-6863)

## கண்டெடுக்கப்பட்டது

பருத்தித்துறை ''குட்லக் எம்போறியம் புடவைக்கடையில் தவறிவிட்ட பணப்பையொன்று உள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும்: உரிமையாளர், குட்லக் எம்போறியம், பிரதான வீதி, பருத்தித்துறை. (சி-6869)

## அறிவுக்களஞ்சியம்

உயர்கல்வி மாணவருக்கும் பாடசாலைக்கல்வி மட்டும் போதாது. பரந்துபட்ட பொது அறிவும் மிக அவசியம். பொது அறிவை வளர்க்கும் நோக்குடையது 'அறிவுக்களஞ்சியம்' நாலாவது இதழ் விற்பனையாகிறது ரூபா 10 உங்கள் விற்பனையாளரிடம் கேளுங்கள். (எ-2488

## நீமியா உரம்

அடிக்கட்டு உரம் கரைந்தோ நீராவியாகவோ விரயமாகாது பாதுகாக்கிறது. நீமியா உரம் பயிர் வளர்ச்சி விளைச்சல் பெருக்கம், பூச்சிகளிலிருந்து பாதுகாப்பு இதன் தனி சிறப்பு அம்சங்கள். வட்டுக்கோட்டை சந்தி அப்பையா ஸ்ரோஸிலும் கிடைக்கிறது. மில்க்வைற் யாழ்ப்பாணம். (எ-2489)

## துரித மீட்டற் பயிற்சி (ஆண்டு 5 — 4)

வெளிவந்து விட்டது. பிரபல பாடசாலை ஆண்டு 6 அனுமதிப்பரீட்சைக்கும், ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கும் ஏற்ற வகையில் புதிய கல்வி நிலையத்தால் புதிதாக வெளியிடப்பட்ட துரித மீட்டற் பயிற்சியை (விடைகளுடன்) 15 மாதிரிப் பயிற்சிகளைக் கொண்டது புதிய கல்வி நிலையத்திலும் யாழ்நகர் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். ([சி-6866)

## தவறிவிட்டது

சுப்பிரமணியம் ஜெயமோகன் இல: 10/3 A. ஒட்டுமடம் என்ற விலாசமிடப்பட்ட அடையாள அட்டை 4 நாட்களுக்கு முன் ஒட்டுமடத்திற்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேல் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி-6872]


# பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரியின் கலைவிழாவும் பரிசளிப்பு விழாவும் கல்லூரி மண்டபத்தில் அதிபர் திருமதி லீலாவதி சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவிலே பிரதம விருந்தினராக வைத்தியகலாநிதி எம் கே. முருகானந்தனும், கௌரவ விருந்தினராக வடமராட்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரையும் கலந்துகொண்டனர். (52)


# பதவி வெற்றிடங்கள்

பிரபல நிறுவனம் ஒன்றுக்கு
பின்வரும் பதவிகளுக்கு
தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள்
கோரப்படுகின்றன

(1) குடிசார் பொறியியலாளர்கள் (Civil Engineers)
(2) தொழில்நுட்பவியலாளர்கள் (Technical Officers)
(3) சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர்கள் - தமிழ் (Shorthand Typists - Tamil)
(4) நிர்வாக அலுவலர்கள் (Administrative Officers)
(5) எழுதுவினைஞர்கள் (Clerks)
(6) படவரைஞர்கள் (Draftsmen)
(7) எழுத்தாளர்கள்

(கதை, கட்டுரை, நாடகம், கவிதை போன்றவை தயாரித்து வெளியிடுவதற்கு மேற்படி பதவிகளுக்கான தகைமையும், அனுபவமும் உள்ளவர்கள் 15-10-92க்கு முன்னர் விண்ணப்பிவுக்கம்.

விளம்பர இல. A-2491
மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்

[எ-2491]

யாழ். பல்கலைக்கழகம்

# மகாபொல கொடுப்பனவு

## 9ம், 10ம் தவணைப் பணங்கள்

மேற்படி கொடுப்பனவுக்கான ஒழுங்குகள் பின்வருமாறு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| **முதலாம் வருடம்** | | |
| மருத்துவபீடம் | 08-10-92 | 9-00 - 12-00 மு. ப. |
| கலைப்பிரிவு | | |
| வர்த்தகப்பிரிவு | 13-10-92 | 9-00 - 12-00 மு. ப. |
| வியாபார நிர்வாகப்பிரிவு | | |
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 16-10-92 | 9-00 - 12.00 மு. ப. |
| பௌதிக விஞ்ஞானப்பிரிவு | | |
| **இரண்டாம் வருடம்** | | |
| மருத்துவ பீடம | 09-10-92 | 9-00 — 12-00 மு. ப. |
| கலைப்பிரிவு | | |
| வர்த்தகப்பிரிவு | 14-10-92 | 9-00 — 12-00 மு. ப. |
| வியாபார நிர்வாகப்பிரிவு | | |
| உயிரியல் விஞ்ஞானப் பிரிவு | 19-10-92 | 9 00 — 12-00 மு. ப. |
| பௌதிக விஞ்ஞானப்பிரிவு | | |
| **நான்காம் வருடம்** | | |
| மருத்துவபீடம் (4ம், 5ம் வருடங்கள்) | 12.10.92 | 9.00 - 12.00 மு. ப. |
| கலைப்பிரிவு | | |
| வர்த்தகப் பிரிவு | | |
| வியாபார நிர்வாகப் பிரிவு | 15.10.92 | 9.00 - 12.00 மு. ப. |
| உயிரியல் விஞ்ஞானப்பிரிவு | | |
| பௌதிக விஞ்ஞானப்பிரிவு | 20.10.92 | 9 00 - 12.00 மு. ப. |

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை

1. பல்கலைக்கழக அடையாள அட்டை
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை

மூன்றும் வருடக் கொடுப்பனவுகளைப் பெறத்தவறிய மாணவர்கள் அவற்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பதிவாளர்,

(எ-2492)

# நகரமுடியாத நிலையில் பல டாங்கிகள்
# இராணுவ முகாம்களில் நிற்கின்றன

(கொழும்பு)

செக்கோஸ்லாவாக்கியாவிலிருந்து இலங்கை இராணுவம் மலிவு விலையில் கொள்வனவு செய்த பல யுத்த டாங்கிகள் நகர முடியாத நிலையில் இராணுவ முகாம்களில் தரித்து நிற்கின்றனவாம்.

1984-ம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட இந்த யுத்த டாங்கிகளை கொள்வனவு செய்ய இலங்கை இராணுவ அதிகாரிகள் பதினொரு பேர் செக்கோஸ்லாவாக்கியா சென்று அங்கு 10 நாட்கள் தங்கியிருந்து இவற்றை கொள்வனவு செய்திருந்தனர்.

இவற்றில் பல டாங்கிகள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு இங்கு ஆகக்கூடியது பத்து கிலோ மீற்றர் தூரத்திற்கே நகர்ந்துள்ளன. இதற்குமேல் நகர அவை மறுத்துவிட்டன.

இதேவேளை அங்கிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரி-55 ரக டாங்கிகளில் இலங்கைப் படையினருக்கு பயிற்சியளிக்க அங்கிருந்து நிபுணர்கள் குழு ஒன்று இங்கு வந்து பயிற்சிகளை வழங்கியுள்ளது.

வார்ஸோ ஒப்பந்தம் இல்லாது போனதால் இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகள் பெரும் வாய்ப்பை பெற்றுள்ளன. நம்பமுடியாத விலையில் போர்த்தளபாடங்கள் இந்நாடுகளுக்கு கிடைக்கின்றன.

நூற்றுக்கணக்கான யுத்த டாங்கிகள், பீரங்கிகள், ஹெலிகொப்டர்கள் யுத்த விமானங்களை மூன்றாம் உலக நாடுகள் மிகவும் மலிவான விலையில் பெறக்கூடிய ஒரு ஏது நிலை உள்ளது

இதேவேளை இலங்கை ஏற்கனவே பெற்றுள்ள பல ஆயுதங்களுக்கு வெடிமருந்துகளும் ரவைகள் கிடைப்பதில் பெரும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இவற்றுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது முன்னர் சிலநாடுகளிடமிருந்து பெற்ற பழைய ரக ஆயுதங்களுக்கான வெடிமருந்துகளையும், ரவைகளையும் தற்போது அந்நாடுகள் தயாரிப்பதில்லை.

ஒருசில நிறுவனங்களே இவற்றை உற்பத்தி செய்கின்றன, இதனால் பழைய ரக ஆயுதங்களை பாவிப்பதில் இராணுவத்திற்கு பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளது சலாடின் கவச வாகனத்தில் பயன்படும் 78 மி மீ நீளமான பீரங்கிக்கு வெடி பொருள் எடுப்பது மிகவும் கஷ்டமான ஒரு நிலையிலுள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொருளாதார நெருக்கடியிலும் மேற்படி ஆயுதப்பிரச்சினையிலும் இலங்கை இராணுவம் பெரும் நெருக்கடிகளையே சந்திக்கிறது. (சி)

## மன்னார் மீனவர்க்கு மீன்பிடி வலைகள்

(மன்னார்)

மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச்சங்கம், கனேடிய அரசின் நிதி உதவியோடு மன்னாரில் மீன்பிடி வலைகளை வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது

விடத்தல்தீவிலிருந்து வெள்ளாங்குளம் வரையில் இருக்கும் ஏழை மீனவர்களுக்கு இந்த உதவி கிடைக்கவுள்ளது.

ஒவ்வொருவருக்கும் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது (கே)

## களுத்துறை நீதிமன்றில் தங்கம் செப்பாக மாறியது

(கொழும்பு)

நீதிமன்றின் பாதுகாப்பிலிருந்த தங்கம் செம்பாக மாறிய சம்பவமொன்று களுத்துறையில் இடம்பெற்றுள்ளது

இதுபற்றித் தெரியவருவதாவது: வழக்கு ஒன்று தொடர்பாக நீதிமன்ற பாதுகாப்பில் சுமார் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான 5 தங்கக்கட்டிகளும், பவுண் மோதிரம் ஒன்றும் வைக்கப்பட்டிருந்தன.

சில வாரங்களின்பின் அந்த வழக்கு நீதிபதியின்முன் வந்தபோது மேற்படி பொருட்கள் செப்பாக மாறியிருந்தன. இந்த மோசடியை அடுத்து நீதிமன்ற பதிவாளரையும், நீதிமன்ற லிகிதரையும் உடனடியாக கைது செய்து காவலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார், (சி)

## தமிழ் சிறு கதையின் ஆரம்பகர்த்தா பாரதி

(நெல்லியடி)

பாரதியைக் கவிஞனாக மாத்திரம் நோக்குகின்ற ஒருபக்கப் பார்வை நம்மிடையே இருந்து வருகின்றது. ஆனால் பாரதி உரை, நடை இலக்கியத்திற்கு ஆற்றிய பங்களிப்பு குறைவான ஒன்றல்ல சிறுகதை, நாவல், குறுநாவலென எழுபத்தைந்து கதை, இலக்கியங்களை பாரதி படைத்திருக்கின்றான் நூற்றைம்பது கதை கட்டுரை எழுதியதன் மூலமும் தமிழ்ச் சிறுகதையின் ஆரம்ப கர்த்தாவாகவும் மூலவேராகவும் பாரதி விளங்கினான்.

இவ்வாறு கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரியில் நடைபெற்ற பாரதி விழாவில் கலந்து "கவிஞன் அல்லாத பாரதி" என்னும் தலைப்பில் கருத்துரை வழங்கிய ஆசிரியர் திரு. தெணியான் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் இ. விஜயரத்தினம் தலைமையில் இவ்விழா நடைபெறறது. (160)

## வீடுகளைப் போல் அகதி முகாம்களையும் சுத்தமாக வைத்திருக்கவேண்டும்

(பண்டத்தரிப்பு)

சுகாதார விதிகளை நன்கு அனுசரிப்பதன் மூலமும் சுகாதாரப் பழக்கவழக்கங்களை பேணுவதன் மூலம் 75 வீதமான நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். அகதி முகாம்களில் உள்ள மக்கள் அனைவரும் முகாமை தங்கள் வீடுகளைப் போல கருதி மிகவும் சுத்தமாக வைத்திருக்கவேண்டியது அவசியம்.

இவ்வாறு சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய அகதிகள் முகாமில் நடைபெற்ற சுகாதாரக் கருத்தரங்கொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். பிராந்திய சுகாதார கல்வி அதிகாரி திரு. கா. வைத்தீஸ்வரன் குறிப்பிட்டார்.

மானிப்பாய்சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி எஸ். சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் மேற்பார்வை சுகாதார பரிசோதகர் திரு. ஏ. ஏ. ஜோன் உரையாற்றுகையில் அகதி முகாம்களில் சுற்றாடல், சூழல் சுகாதாரத்தை பேணுவதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் மக்கள் ஒத்துழைப்பு இல்லாமல் சுகாதார அதிகாரிகளால் மட்டும் சுகாதாரப் பிரச்னைகளை தீர்த்துக்கொள்ள முடியாது என்றும் குறிப்பிட்டார்.

சங்கானை சுகாதார பரிசோதகர் திரு. இராசநாயகம் பிள்ளை, போரூட் நிறுவனத்தின் பிரதிநிதி, செஞ்சிலுவை சங்க பிரதிநிதி ஆகியோரும் உரையாற்றினார்கள். (72)

## பிறப்புச்சான்றுபத்திரங்கள்

(புலோலி)

பருத்தித்துறை பெரும்பாக காணிப் பதிவகத்தில் பிறப்புச் சான்றுப் பத்திரங்கள் தற்போது உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகின்றன. (61)

## நெல் விதைப்பு பாதிப்பு

(கொழும்புத்துறை)

தற்போது கடும் மழை காரணமாக சரசாலைக் கிராமத்தில் நெல் விதைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. விதைதத வயல்களில் நெல் விதைக்க முடியாதவாறு வெள்ளம் மூடியுள்ளது. (154)

## மழையினால் அகதிகள் பாதிப்பு

(அரியாலை)

கடந்த சில தினங்களாக பெய்த மழையினால் யாழ். பண்ணைவீதியில் சேதமடைந்த வர்த்தக நிலையக் கட்டிடங்களில் தங்கியுள்ள தீவக அகதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (59)

## பிரதேச செயலரின் தற்காலிக அலுவலகம்

(பருத்தித்துறை)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கு வருகைதரும் பக்த அடியார்களின் பல்வேறுவகையான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கென ஆலயத்தில் பருத்தித்துறை பிரதேச செயலரின் தற்காலிக அலுவலகமொன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்தில் நாள்தோறும் இரு கிராம சேவை அலுவலர்கள்கடமையில் ஈடுபட்டுவருகின்றனர். (52)

## மாவீரர்களுக்கு அஞ்சலி

(கொட்டடி)

மண்மீட்புப் போரில் செப்டம்பர் மாதம் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட தீவகத்தைச் சேர்ந்த ஐந்து மாவீரர்களினது நினைவு அஞ்சலிக்கூட்டம் நாவற்குழி நவநீத குடியிருப்பு மைதானத்தில் கொண்டாடப்பட்டது.

தீவக மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. இ. நா. இராசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் அஞ்சலிக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டு துணைப் பொறுப்பாளர் திரு. தேவர், தமிழீழ விடுதலைப்புலிகளின் தீவக அரசியல் துணைப் பொறுப்பாளர் திரு. செம்மனன் (யோகன்), தீவக மகளிர் அமைப்பு துணைப்பொறுப்பாளர் செல்வி கயல்விழி, தீவக மாவீரர் செயற்பாட்டு குழு உறுப்பினர் திரு. ப. கனகலிங்கம் உட்பட பலர் உரையாற்றினார்கள். (75)

## கிளிநொச்சியில் வீதிகள் குளங்கள் புனரமைக்க ஏற்பாடு

(உடுப்பிட்டி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வீதிகள், குளங்கள் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

நீண்டகாலமாகபுனரமைப்பு செய்யப்படாமல் தூர்ந்து போன முக்கிய குளங்களையும் மக்கள் போக்குவரத்துக்கு பயன்படுத்துகின்ற முக்கிய வீதிகளையும் புனரமைப்பு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது

மற்றும் குன்றும் குழியுமாக காணப்படுகின்ற வீதிகளைச் செப்பனிடும் வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. (150)

## வேலைவழங்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் பீதி காரணமாக வேலையிழந்த நகர அபிவிருத்திகிரிடபு (?) தொழிலாளர்களுக்கு வேலை வழங்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

மாகாண சபைகள் அமைச்சர் பெஸ்ரஸ் பெரராவை, கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி இவ்வாறு கேட்டுள்ளார். (கே)

## முதல் பெண் மாவீரர் லெப்டினன் மாலதியின் நினைவஞ்சலிக் கூட்டம்

(நெல்லியடி)

1987ம் வருடம் அக்டோபர் 10ம் திகதி கோப்பாய்ப் பகுதியில் இந்திய இராணுவத்தின் நேரடியான மோதலில் வீரச்சாவெய்திய விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பின் முதல் பெண் மாவீரரான 2ம் லெப்டினன் மாலதியின் நினைவஞ்சலிக் கூட்டம் இம்மாதம் 10ம் திகதி மாலை வடமராட்சி மகளிர் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது

மகளிர் அமைப்பின் முதல் பெண் மாவீரரான 2ம் லெப்டினன் மாலதியின் திருவுருவப்படம் 10ம் திகதி மாலிசந்தியில் திறந்து வைக்கப்படவுள்ளது. (160)

## ஓய்வூதியத்தில் 600 ரூபா அதிகரிக்க கோரிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி சேவை ஓய்வூதியர் சங்கம் வாழ்க்கைச் செலவு அதிகரிப்புகாரணமாக ஓய்வூதியத்தில் மேலும் அறுநூறு ரூபா கூட்டித்தரவேண்டும் என்று அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

இக்கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்துவதற்கு இலங்கையிலுள்ள அனைத்து ஓய்வூதியர் சங்கங்களும் போராடுவதற்கு தங்களோடு இணையுமாறு கேட்டுள்ளனர்.

இதுகுறித்து 351/2, காலி வீதி, கொழும்பு என்ற விலாசத்தோடு ஓய்வூதியர் சங்கத்தினர் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## யாழ். மாவட்டத்தில் பதினேழு குடும்பங்களுக்கு விவசாய பணிக்கொடை

(உடுவில்)

விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் விவசாய காப்புறுதிச்சபையால் யாழ்ப்பாணத்தில் இரண்டுபெண்களுக்கு அண்மையில் மரணப் பணிக்கொடைகள் வழங்கப்பட்டுள்ளன.

தாவடி வடக்கைச் சேர்ந்த திருமதி வே. இராஜேஸ்வரி. புத்தூரைச் சேர்ந்த திருமதி ந. நாகநந்தினி ஆகிய இருவருக்கும் இவ்வாறு மரணப் பணிக்கொடை கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

விவசாயிகளுக்கான ஓய்வூதியத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இதுவரை சுமார் 371 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் இதில் பதினேழு விவசாயக் குடும்பங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாயப் பணிக்கொடைகளைப் பெற்றுள்ளதாகவும் விவசாய ஓய்வூதியதிட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ்பகுதிகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருவருக்கும், வவுனியா மாவட்டத்தில் இருவருக்கும், மன்னார் மாவட்டத்தில் ஆறுபேருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவருக்கும், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏழுபேருக்கும் திருகோணமலை மாவட்டத்தில் ஒருவருக்கும், அம்பாறை மாவட்டத்தில் இருபத்தொரு பேருக்கும் விவசாய ஓய்வூதியத் திட்ட மரணப்பணிக்கொடைகள் வழங்கப்பட்டுள்ளன. (109)

# 50,000'க்கும் அதிகமானோர் புற்றுநோயால் பாதிப்பு

## சுகாதார அமைச்சு தகவல்

(கொழும்பு)

இலங்கையில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் புற்று நோயால் பீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் புற்றுநோயினால் ஆண்டுதோறும் 600 பேர் இறக்கின்றனர்கள். இதேநேரம் 500 பேர் ஆண்டுதோறும் இந்த நோயினால் பீடிக்கப்படுகின்றனர்கள்.

புகைத்தல், மதுபானம் அருந்துதல், வெற்றிலை போடல் போன்ற பழக்கவழக்கங்களால், 35 வயதுக்கும் 65 வயதுக்கும் இடைப்பட்ட ஆண்களும், 35—55 வயதுக்கிடைப்பட்ட பெண்களும் இந்த நோயால் பாதிக்கப்படுகின்றனர்கள். இருதய புற்றுநோயும், நுரையீரல் புற்றுநோயுமே இலங்கையில் பெரும்பான்மையோருக்கு பீடிக்கின்றது.

புற்றுநோயினால் பீடிக்கப்படுவோருக்குச் சிகிச்சையளிப்பதற்காக சுகாதார அமைச்சு ஆண்டுதோறும் 33 கோடி ரூபாவைச் செலவு செய்கின்றது.

புற்றுநோய் அறிகுறி தென்படும்போது தகுந்த சிகிச்சை பெற்றால் 80 வீதமானோர் குணமடைய முடியும் என்று சுகாதார அமைச்சின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [வி]

# தமிழகத்தில் தி. மு. க. நேற்று ஆர்ப்பாட்டம்

(சென்னை)

பெற்றோல், டீசல், சமையல் எரிவாயு ஆகிய எரிபொருள்களின் விலைகளை தமிழக அரசு அதிகரித்ததைக் கண்டித்து தி. மு. க.வினர் சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடாத்தியதாக தெரிவிக்கப்பட்டுகிறது.

இதேவேளையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் வீட்டில் பொலிசார் நடந்து கொண்ட முறையைக் கண்டிக்கும் முகமாக கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம் நடாத்தியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன (க)

### ஆட்பலம்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வைத்தியரட்ன தலைமையில் அனுராதபுரத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த ஜெரி டி சில்வா மேலும் பேசுகையில் கூறியதாவது:

வடபகுதியில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்றும் கூறினார். [வி]

### மட்டக்களப்பு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விடுதலைப்புலிகள் இவ்விரு காவலரண்களையும் முற்றாக அழித்த பின்பு, அங்கிருந்த இராணுவ சாதனங்களான 40 மில்லிமீற்றர் பிஸ்டல் ஒன்று, எறிகணைகள், ஜே. ஆர். கைக்குண்டுகள் உட்பட பல ஆயுதங்களைக் கைப்பற்றினர்கள்.

பத்து நிமிடங்கள் வரையில் நடைபெற்ற இம்மோதலில் புலிகளின் தரப்பில் எந்தவித சேதமும் ஏற்படவில்லையென்றும் கூறப்படுகின்றது. (வி)

# இடம் பெயர்ந்தோருக்கு 15-ம் திகதி முதல் முழு நிவாரணம்

(கொழும்பு)

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு தமது சொந்த இடங்களைவிட்டு இடம்பெயர்ந்த தமிழ்மக்களுக்கு மீண்டும், முழுஅளவிலான நிவாரணம் இம்மாதம் 15ம் திகதி முதல் வழங்கப்படுமென அரசு அறிவித்துள்ளது.

நிதிப் பற்றாக்குறையினால், நிவாரணம் அரைவாசியாகக் குறைக்கப்படுமென்று கடந்த மாதம் அறிவித்த அரசு, இம்மாதம் 15-ம் திகதி முதல் மீண்டும் முழு அளவிலான நிவாரணம் வழங்கப்படுமென்று, நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலக அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இடம் பெயர்ந்து அகதிகள் முகாம்களிலும் வெளியிடங்களிலும் தங்கியிருக்கும் 5 லட்சத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்களுக்கு மேற்படி நிவாரணம் மீண்டும் கிடைக்கவுள்ளது. (வி)

## சிப்பாய் பலி

(கொழும்பு)

வெலிஓயாப்பகுதியில் விடுதலைப்புலிகள் நேற்று மேற்கொண்ட தாக்குதலொன்றில் இராணுவ சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், படையினர் இருவர் படுகாயமடைந்ததாகவும் உயர் இராணுவ அதிகாரிகள் நேற்று கொழும்பில் தெரிவித்தனர். (க)

## இன்று

[யாழ்ப்பாணம்]

மேஜர் முரளி ஞாபகார்த்தமாக யாழ்.மாவட்டப் பாடசாலைகளிடையே நடாத்தப்பட்டுவரும் தாச்சிப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் இன்று வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு முத்துத்தம்பி மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

1-ம், 2-ம், 3-ம், இடத்துக்கான ஆண், பெண்களின் ஆட்டங்கள் இன்று நடைபெறும். (வி)

### கிழக்குப்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்பட்டுகிறது.

10 வைத்தியர்கள் முதலாவது குழுவில் அங்கம் வகிப்பார்கள் என்றும், இவர்களுக்கான சம்பளம் பாகிஸ்தானிய அரசால் வழங்கப்படும் என்றும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (க)

### வைத்திய

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சுகாதார அமைச்சர் திருமதி றேணுகா ஹேரத் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற சுகாதார அமைச்சு சம்பந்தப்பட்ட குறைநிரப்புப் பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தெரிவிக்கையில்:- 150 தாதிமார் தற்போது வெளிநாடு சென்றுவிட்டதாகவும் 5 000 தாதிமாருக்கு அரசு அண்மையில் நியமனம் வழங்கியதாகவும் தெரிவித்தார். (க)

### வடபகுதி மீது

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தில் வைத்து அண்மையில் வழங்கிய பேட்டியின்போது குறிப்பிட்டார்.

கடந்த 4 மாத காலமாக யாழ் பகுதியின்மீது ஸ்ரீலங்கா இராணுவம் தாக்குதல் நடாத்தும் சமயங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு வேறு இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். சுமார் ம ஆயிரம் பேர் வரையில் சமீபகாலமாக தமது இருப்பிடங்களைவிட்டு இடம்பெயர்ந்துள்ளதோடு அவர்கள் பெரும் இன்னல்களையும் அனுபவித்துவருகின்றனர்கள்.

தமிழ் மக்கள் வெளியேறிய பகுதிகளில் தாம் விரும்பியோரை கொண்டுவந்து குடியேற்றலாம் என்ற நோக்கம் ஸ்ரீலங்கா அரசுக்கு இருக்கலாம்.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கூடாக ஏதோ ஒரு தீர்வு கிடைக்கும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர்கள் ஆனால் அப்படி ஒரு தீர்வு வருமபட்சத்தில் நாமும் அதனை வரவேற்பதாகவும் ஆனால் நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு ஐ தே கட்சியே உருப்படியான அபிப்பிராயம் எதனையும் சமர்ப்பித்ததாக தெரியவில்லை. இதிலிருந்து ஐ தே. கட்சியின் நிலைப்பாட்டை ஓரளவு உணர்ந்துகொள்ள முடிகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். [க]

### உலகில் மனித

1ம் பக்கத் தொடர்ச்சி]

கூறியுள்ளது.

இக்குழு தற்போது இலங்கைக்கு 2-வது தடவையாக வந்துள்ளது. இவர்கள் இங்கு பத்து நாட்கள் தங்கியிருந்து நிலைமைகளைக் கண்காணிப்பார்கள்.

மனித உரிமைகள் மீறல் சம்பந்தமாக இக்குழுவினர் கருத்துக் கூறுகையில்:- 1983-ம் ஆண்டு தமிழர் பிரச்னை இலங்கையில் தோன்றியது தொடக்கம் இதுவரை 12 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் காணமல போயுள்ளார்கள். இதற்கான ஆதாரங்கள் எம்மிடம் உண்டு.

அவசரகாலச் சட்டம் என்ற போர்வையில 7 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்பதற்குச் சான்று பயக்கும் விதமாக அரச ஊழியர்கள் மீது வழக்குத் தொடரமுடியாது என்ற சட்டம் இன்னும் அமுலில் இருக்கின்றது.

சர்வதேச சட்டதிட்டங்களுக்கு ஒப்பாக, இலங்கையில், சட்டதிட்டங்கள் மாற்றி அமைக்கப்படவேண்டும்

இவ்வாறு மேற்படி குழுவினர் முதல்தடவையாக இலங்கைக்கு வந்த பின்பு பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருந்தார்கள். (வி)

# ஜெயலலிதாவை பதவி விலகக்கோரி

## தமிழகத்தில் இயக்கம்

(சென்னை)

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவை பதவிவிலகக்கோரி ஜனதா கட்சி தலைவர் சுப்பிரமணியசுவாமி தமிழகமெங்கும் இயக்கம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளார்.

நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தே இந்த இயக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அத்தோடு எம். ஜி. ஆர். உயிரோடு இருக்கும்போது செல்வி ஜெயலலிதா நடத்திய தொலைபேசி உரையாடல்களையும் வெளியிடுமாறு, உள்துறை அமைச்சர் சவானிடம் கேட்டுக்கொண்டுள்ளார். (கே)

## இன்றைய உதைபந்தாட்டம்

[யாழ்ப்பாணம்]

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டப் போட்டியில் பின்வரும் கழகங்கள் இன்று மோதுகின்றன.

முதல் ஆட்டத்தில் தோப்புக்காடு கழகமும் சென். பீட்டர்ஸ் கழகமும்: 2-வது ஆட்டத்தில் சென் அன்ரனிஸ் கழகமும சென். றேக்ஸ் கழகமும் மோதுகின்றன. (வி)

## தொண்டர் ஆசிரியர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்கள் இந்த மாதச் சம்பளம் பெற வேண்டுமானால் அவர்கள் கல்வி பயிற்றுவிக்கும் பாடசாலையின் உறுதிச் சான்றிதழும் 'வெளிப்படுத்துகைப்' பத்திரமும் நிரப்பிக் கல்வித் திணைக்களத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்று கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி பத்திரங்களைச் சமர்ப்பிக்காது விடின் இந்த மாதச் சம்பளத்தைத் தொண்டர் ஆசிரியர்கள் பெறமுடியாது என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (சு)

# ஜம்முவில் குண்டு வெடிப்பு 11 பேர் பலி

(சிறிநகர்)

ஜம்முவுக்கு அருகே நேற்று பயணிகள் பஸ் ஒன்றில் குண்டு ஒன்று வெடித்ததில் 13 பேர் பலியாகினர். 61 பேர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தோரில் அநேகரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

ஜம்முவை நோக்கிச் சென்ற பஸ்ஸில் தீவிரவாதிகள் சக்தி மிக்க குண்டை வைத்ததனால் இச் சம்பவம் நிகழ்ந்திருக்கிறதென பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அப்பகுதிக்கு பொலிஸ் அதிகாரிகள் விரைதுள்ளனர்.

பாகிஸ்தானிய உளவுப் படை குண்டு வெடிப்பிற்கு காரணமாக இருக்கலாம் என்று புலனாய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (கே-க)

## பிர்லா கைது

(புதுடில்லி)

பிரபல பயங்கரவாதி குர்திஷ்சிங் பிலர நேற்று புதுடில்லியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்

1990ம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற 50க்கும் அதிகமான பயணிகள் படுகொலைச் சம்பவத்திற்கும், 1986ம் ஆண்டில் அமிர்தசரஸில் 45 பேர் கண்மூடித்தனமாகச் சுடடுக் கொலைப்பட்ட சம்பவத்திற்கும் பிர்லா சூத்திரதாரியாக இருந்ததாகப் புதுடில்லிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (க)

### ஐ. நா மனித

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் இம்மாதம் 15ம் திகதி வரை இங்கு தங்கியிருப்பர்.

இங்கு இருக்கும்போது இவர்கள் வெளிநாட்டமைச்சர், பாதுகாப்பு அமைச்சு செயலாளர் மற்றும் மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் சந்திப்பதோடு ஏனைய நிறுவனங்களுடனும் தொடர்பு கொள்வர். (கே)

### வல்வெட்டித்துறையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

பாவர் நடேசனும் ஏற்றி வைத்தனர்.

இதைத் தொடர்ந்து மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா, நீதி, நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைக்க, தளபதி கங்கை அமரன் காவல் பணிமனையைத் திறந்து வைத்தார்.

இந்த வைபவத்தில் யாழ் மாவட்ட விசேட தளபதி திரு தமிழ்ச்செல்வன் உட்பட இயக்கத்தின் முக்கிய பிரமுகர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இப்பணிமனையில் பொலிகண்டி, வல்வெட்டித்துறை, கொத்தாவத்தை, நவிண்டில், உடுப்பிட்டி, இமையாணன், கொண்டப்பனறு, மண்டான் ஆகிய பிரதேசங்களில் வாழும் பொதுமக்கள் தமது புகார்களைப் பதிந்துகொள்ளலாம்.

### எழுதுவினைஞர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் பணி புரியும் சிற்றூழியர்களை எழுதுவினைஞர்களாகத் தரமுயர்த்துவதற்கான பரீட்சை கடந்த 25-ம் திகதி கொழும்பில் நடைபெற்றது

இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வட பகுதியிலிருந்து பல இளைஞர்கள் கொழும்பு சென்றிருந்தனர்.

இவர்களைச் சுற்றி வளைத்த பொலிசார் அவர்களது அடையாள அட்டைகளை வாங்கிப் பார்த்து அவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என அறிந்தது நீண்ட நேரமாக விசாரணை செய்தனராம்.

சம்பந்தப்பட்டவர்கள் தாம் பரீட்சை எழுத வந்ததாகக் கூறி அதற்குரிய அனுமதி அட்டைகளைக் காட்டிய பின்னரும் சில மணி நேரத்தின் பின்பே இவர்கள் விடுவிக்கப்பட்டனர். (71)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு அக்டோபர் மாதம் 8ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B / 10336/8.